விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 007 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (26.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## டிசம்பர் மாதத்தில் மட்டும்
## 945 டெங்குத் தொற்றாளர்கள் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதத்தில் இது வரை 945 டெங்குத் தொற்றாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நேற்றும் மேலதிகமாக 40 டெங்கு நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.போதனா வைத்திய சாலைப்பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி 04

## டெங்குத் தொற்றால்
## 11 மாத குழந்தை யாழில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த ஆண்குழந்தையொன்று டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளது.

மதுரன் கிருத்திஸ் என்ற பதினொரு மாத குழந்தையே இவ்வாறு 04

# சில மதத் தலைவர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பு

## அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

**சில மதத் தலைவர்கள் பொலிஸார் தேடும் பாரிய குற்றவாளிகளுடன் தொடர்பில் இருப்பதாக அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

ஹோமாகமவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி கும்பலுடன் தொடர்பு களைப் பேணிவரும் சில மதத் தலைவர்கள் கூட குற்றவாளிகள் 04






## நாடு முழுவதும்
## 24 மணி நேரத்தில்
### 533 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் போதைப்பொருள் 04

## குடத்தனையில் உயிரிழந்தவரின்
## மரணத்தில் சந்தேகம்
### உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு

(கரணவாய்)

குடத்தனை பகுதியைச் சேர்ந்த வயோதிபரின் மரணம் கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகம் நிலவுவதன் காரணமாக உடற்கூற்று பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொற்பதி, குடத்தனையை சேர்ந்த சின்னத்தம்பி குருசாமி (வயது-73) என்பவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி 04

## யாழ்.நகரில்
## மதுபானம் விற்ற 3 இடங்கள் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

மதுபான விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப் 04

## புதிய கொரோனாத் திரிபினால்
## இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு மிகக் குறைவு

(கொழும்பு)

கோவிட் - 19 வைரஸின் 'JN-1' என்ற உப திரிபினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக்குறைவு என சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில மாதங்களாக இலங்கை 04

DLB
DEVELOPMENT LOTTERIES
අද කෝටිපති
அத கோடிபதி ADA KOTIPATHI
இன்றைய சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 7.8 கோடிக்கும்
(ரூ. 78,675,450.40)
அதிகமாகும்
(C-2178)

நடுவு நிலை தவறாது நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இராசரத்தினம் சகிதன்



மலர்வு : 28.03.2004
உதிர்வு : 26.12.2004

கண்ணா நீ எங்கே?

காலங்கள் மாறலாம்
காட்சிகள் மாறலாம்
கண்ணா நாம் கொண்ட உன் மீதான
காதல் மட்டும் மாறாதடா.....

ஆயிரம் சொந்தங்கள்
அருகிலுண்டு – அழகா
அன்புகொள்ள யாரும் இல்லை
இங்கு உன்போன்று.

ஆழிப்பேரலை அழகன் உன்னை
கவர்ந்து சென்று ஆண்டுகள் பல
ஆகிவிட்டது....
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவுகள் எம்முள்
அழியாது ஐயா!

செ.இராசரத்தினம் (செல்வன்)
செல்லையா பல்பொருள் வாணிபம்,
கடற்கரை வீதி, முல்லைத்தீவு.
077 945 9941 (18366)

என்றும் உன் வரவை எதிர்பார்க்கும்
அம்மா, அப்பா, தம்பிமார்.

## வீடு விற்பனைக்கு

கைதடி சந்தியிலிருந்து 1km தூரத்தில்
கைதடி கிழக்கு நூலகத்திற்கு
அருகாமையில் 6 பரப்பில் அமைந்துள்ள
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ளும் நேரம்:4pm - 6pm
தரகர் தேவையில்லை (C-8020)
077 690 6644

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8016)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

# மன்னாரில் விபத்து இளைஞன் மரணம்

மன்னார் நானாட்டான் - முத்தரிப்புத் துறை பிரதான வீதியில் நேற்று திங்கட் கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுள்ளார்.

வீதியில் உள்ள வளைவு ஒன்றில் மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட பாலத் தினுள் விழுந்து விபத்து ஏற்பட்டுள் ளது.

இதன் போது மோட்டார் சைக் கிளை ஓட்டிச்சென்ற முத்தரிப்புத்துறை கிராமத்தைச்சேர்ந்த வயது 28 வயது டைய இளைஞர் ஒருவரே சம்பவ இடத்தில் உயிரிழந் துள்ளார்.(ம-7,285)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்.
சூசைமுத்து பரஞ்சோதி
எமது பாடசாலையின் சித்திர பாட ஆசிரியர்

அன்னாரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் (C-8017)

தோற்றம் : 02.04.1966
மறைவு : 24.12.2023

பிரிவுத் துயர் பகிரும்
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை

தமிழ் வாழ்க

# 25 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட செயலாளர் நாயகமும், அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும், சமாதான நீதிவானும் (JP), திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும், முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

## அமரர் உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா



அவர்களின் 25ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு 26.12.2023 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர் - யாழ். கிளி. மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் கௌரவ K.N. டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வீ. ஆனந்தசங்கரி.

அப்பா! அப்பா! என்று கதறுகின்றோம்–
உங்கள் செவிதனிற் கேட்கவில்லையா?
பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா! ஒரு
கூண்டில் வாழ்ந்த எம்மைவிட்டு
எங்கு தான் சென்றீர்கள் அப்பா!

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

"நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
அங்கே தீமைகள் நுழைந்துவிடக் கூடாது"
– எம்.ஜி.ஆர்."

"கடல் நீர் ஏன் உப்பானது? கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்"
– பேரறிஞர் அறிஞர் அண்ணா

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நிகழ்வின் இடைவேளையில்
நல்லூரின் வீதியிலே பேசிக்கொண்டிருந்த அப்பாவுக்கு
மாயமாகவே வந்தது எங்கள் குலவிளக்கின் தலையிலே
நாலுரவைகள் துளைத்ததுவே

பிஸ்டல் என்னும் கொடிய
நஞ்ச குருதியிலே தோய்த்தாரே
எங்கள் இதயக்கனி மறைந்தாரோ?

நல்லவர்கள் வாழ்வதில்லை – இது
நானிலத்தின் தீர்ப்பு.

அணைந்துவிட்ட எங்கள் குலவிளக்கை
இன்னும் நினைப்போம் என்று
வானத்துச் சந்திரனே
இவ் வையகத்தில் உலாவிய
என் மாசற்ற அப்பாவை
எப்போ காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
மண்ணிலிருந்து வணங்குகின்றோம்
உங்கள் பணி தொடரும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
ஈழமண்ணில் இருந்து வணங்குகிறோம்
நன்றி வணக்கம்

பெற்றோர் மகிழ – 24.01.1948
மனைவி மக்கள் கதற – 26.12.1998

திதி:- செவ்வாய்க்கிழமை 26.12.2023

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பொன். மதிமுகராஜா விஜயகாந்த் (தலைவர் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை சமூக சேவை அமைப்பாளர். யாழ்ப்பாணம், இலங்கை)
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.

அனைத்துலக சமூகசேவைகள் நற்பணி, பொதுப்பணிச் செயலகம்,
கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம். இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடத்திய மார்கழிப் பெருவிழா நேற்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.**

(படங்கள்:சிவசாந்தன்)

# பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபட்ட 1,091 பேர் அடையாளம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபட்ட 1,091 பேரை பொலிஸார் வெற் றிகரமாக அடை யாளம் கண்டுள்ளதாக பொதுபாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரி வித்துள்ளார்.

அவர்களில் சுமார் 135 பேர் சிறையில் இருந்தபோதும் தொடர்ந்து குற்றச்செயல்க ளில் ஈடுபட்டுவருவதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, வரலாற்றில் முதல் தடவையாக பண்டார நாயக்க சர்வதேச விமானநிலை யத்தில் புகைப் படக்கருவி அமைப்பை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிக்கும், தேடப்படும் குற்றவாளிகளின் கண்காணிப்பை மேம் படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் அலஸ் தெரிவித்துள்ளார். (5-6)


# காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18371)

**077 468 3354, 071 173 3911**


# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1942



மறைவு 24 . 12 . 2023

## சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை (குணம்)

(உரிமையாளர் பரம்ஸ் மோட்டோர்ஸ், பரம்ஸ் ரான்ஸ்போட் - சாவகச்சேரி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், நாகரத்தினம், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் விக்கினேஸ்வரி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், கிருபராஜ் (பிரான்ஸ்), ஜீவராஜ் (பரம்ஸ் ரான்ஸ்போட்), சுஜிதா, சுதர்சன் (பரம்ஸ் மோட்டோர்ஸ்), சுதாகர் (லண்டன்), சுதாஷினி (ஆசிரியை - யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரி (பிரான்ஸ்), லோஜினி, ஜெயகாந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பருத்தித்துறை நகரசபை), சுபாசினி, வினுஜா (லண்டன்), கிஷோக்குமார் (கிஷோர் ரயர் ஹவுஸ் - சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினாஷ், அனுஷ்கா (பிரான்ஸ்), லக்மிகன், லக்ஷ்மிகா, சஞ்யுதன், ஆருஷி, ஆஷிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், அக்சயன், பிரஜித், மதுமிரா, யுவன், யதார்த், குருஜித் ஆகியோரின் ஆருயிர் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வராஜா, பூமணி மற்றும் கணேசன், வளர்மதி, சந்திரலேகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2023) புதன்கிழமை கண்டுவில் 1 ஆம் ஒழுங்கை, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**குடும்பத்தினர்.**

**077 809 8798**

**077 774 3350**

(C-8018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடத்தனையில்...

ருந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை நெல்லியடி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

உடற்கூற்று பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா மேற்கொண்டார். வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் குடல் வெடிப்பு ஏற்பட்டு இரத்த கசிவு காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

எனவே இம்மரணம் கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் மரணவிசாரணை அதிகாரி இது தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக பாரப்படுத்தியுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## 11 மாத...

உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## 24 மணி...

உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 533 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்களிடம் இருந்து 273 கிராம் ஹெரோயின், 102 கிராம் ஐஸ், 1.778 கிலோ கிராம் கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ள்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மதுபானம்...

பாண நகரில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்ற மூன்று இடங்கள் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியர் வீதி, கலட்டி சந்தி மற்றும் முலவை சந்திப் பகுதியில் நடத்திய தேடுதலின்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 117 கால் போத்தல்களும் 9 முழு சாராயப் போத்தல்களும் மீட்கப்பட்டுள்ளது.

மண்ணுக்குள் குழி வெட்டி அதற்குள் சாராயப் போத்தல்களை வைத்திருந்து விற்பனையில் ஈடுபட்டவரும் இதன்போது கைது செய்யப்பட்டார்.

நத்தார் பண்டிகை மற்றும் போயா தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றும் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## இலங்கைக்கு...

யில் பதிவாகும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் கோவிட் - 19 வைரஸின் 'JN-1' என்ற உப திரிபின் அபா யத்தை மதிப்பிடுவதற்கு மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அதன்படி அந்த நிறுவனம் ஏற்கெனவே பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இன்ஃப்ளூவன்ஸா மற்றும் பிற சுவாச நோய்களின் பரவலை முகமூடி அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் போன்றவற்றின் மூலம் குறைக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## 945 டெங்கு...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தங்களது சூழலை நுளம்புகள் பரவாத வகையில் பாதுகாக்க வேண்டும் என த.சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதி டெங்கு நோயாளிகளால் நிரம்பி வழிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஒருவருக்கு காய்ச்சல் எற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்திய சாலையை நாடுவது சாலச் சிறந்தது என்றார். (ம-7,33)

# போதை மாத்திரைகளுடன் முல்லையில் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் 22 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இளைஞர்கள் மத்தியில் அதிகளவில் போதை மாத்திரைகள் விற்பனையாகி வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் இந்த சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது 23 வயதுடைய இளைஞன் 22 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞனை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவரை ஏழு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## சில...

மீதான பொலிஸாரின் அடக்குமுறையை விமர்சிக்கும் வகையில் பாசாங் குத்தனத்துடன் செயற்படுகின்றனர்.

"பொலிஸாரின் மன உறுதியைக் குலைக்கும்வகையில் அரசியல்வாதிகளும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

"இதுபொலிஸ் துறையின் நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை திசை திருப்புவதற்காகவே. எமது தனிப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உட்பட பல்வேறுசவால்களை இந்த செயற்பாட்டில் நாம் எதிர்கொள்கிறோம்.

அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நான், ஒரு அமைச்சராக தீர்மானித்துள்ளேன். அதற்குத் தேவையானதைரியத்தை ஜனாதிபதி எனக்குத் தருகிறார். பொலிஸாரின் மன உறுதியை அதிகரிக்க, ஒத்துழைக்குமாறு அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்," என்று அவர் கூறினார். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 0165
P 5 9 4 3 0 7 P
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1369
H 08 29 43 66 H
39473

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3581
சீட்டிழுப்பு திகதி 25.12.2023
A 16 17 21 41
A 07821
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 0648
சிம்மம் 09 46 47 48 சிம்மம்
47964 23

மஹஜன சம்பத
திகதி 2023/12/25
சீட்டிழுப்பு இலக்கம் 5339
V 0 3 4 0 7 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் .1687
H 03 16 48 50 54
65287

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.12.2023 வெற்றி வாரம் 047 வர்ணம் ஊதா
M 3 6 6 5 3 9
48247
24,793,983.20
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2313 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.25 தினம் திங்கட்கிழமை
03 20 26 38 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,347,548/-
44280

சனிதா
திகதி 2023.12.25 வெற்றி வாரம் 4474
05 41 60 69 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,943,576.00
07821

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4025 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.25 தினம் திங்கட்கிழமை
17 27 28 59 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,151,072/-
802147

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 23 30 43 51 65
1489 பச்சை 2023.12.25 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 482,090,064.20

ஜயோதா Jayoda
திகதி 2023.12.25 வெற்றி வாரம் 1985 வர்ணம் செம்மஞ்சள்
05 27 58 63 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,112,672.00
60356

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2139
சீட்டிழுப்பு திகதி: 2023.12.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,675,450.40
39 55 60 66 U
806139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் நமசிவாய வாழ்க
ஆத்ம நாதன் வாழ்க
மாணிக்கவாசகர் வாழ்க

# காரைநகர் அருள்மிகு ஈழத்துச் சிதம்பரம் ஐந்து திருத்தேர் திருவீதி வரும்தினம் திருமுறை ஓதி புணருத்தானம் நடைபெற்று கும்பாபிஷேகம் கண்டு உய்வோம்-26.12.2023



பாதாளம் ஏழினும்கீழ் சொற்பொழிவு பாதமலர்
போதார் முனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே!
பேதை ஒருபால்திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்தரன் தன்கோயில் பிணாப் பிள்ளைகாள்!
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!.

இறைவனுடைய திருவடிக்கமலங்கள் கீழாய்ச் சொல்லின் அளவைக் கடந்தாயது. அவரது திருமுடி மேலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் மேலாயது. அடியார் உள்ளத்தில் இருப் பவன். வானுலகினரும் மண்ணுலகினரையும் ஆகிய எல்லாரும் புகழ்ந்தாலும் புகழ்ச்சி முற்றுப் பெறாது. ஒப்பற்ற உயிர்த்துணைவன், நாம் திருவாசகத்தை தினமும் இல்லங் களிலும் ஆலயங்களிலும் ஓதி ஆலயப் புணருத்தானும் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் கண்டு தரிசித்து, குவலயத்தில் உயர்ந்து வாழ்வோம் "ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

**மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாத் தொடங்கினோர்க்க ஒரு வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே**

பொதுவாக ஒரு தலத்தின் பெருமை, அத்தலத்துக்கோயில் சிறப்பாலும் மூர்த்தி சிறப்பாலும் தீர்த்தவிசேடத்தாலும் அத்தலத்தில் நிகழும் அருளற்புத நிகழ்ச்சிகளாலும் அத்தலத்தில் தோன்றும் பெரியோர்களாலும் அத்தலத்தில் முத்தி எய்யும் பெரியோர்களாலும் அத்தலத்தைப் பெரியோர்கள் போற்றிப் பாடுவதாலும் இவை போன்ற நல்வார்த்தைகளாலும் சற்குருவும் வாய்க்கும். இப்பெருமைகள் அனைத்தும் பெற்றுள்ளது. ஈழத்துச் சிதம்பரம் பராபரமே. 'ஓம் சிவத்திண்ணபுரம் கூத்தனே'

நாவன் தம் மொழுக்காறு ஒழுக்கநெறி நின்று வாழும் மேன்மக்கள் கொண்டதாய் ஆக்கியது என்கிறார் இளமுருகனார். ஆண்டி முனிவர், அம்பலவி முருகர் காட்டிய பாதையில் இன்றும் காரைநகர் மக்களின் வாழ்க்கை முறையை நன்குணர்ந்தவர் அறிவர்.

**யார் அறிவார் இறைவன் பேரருளை**

**மாணிக்கக் கூத்தனை வண் தில்லைக் கூத்தனைப்**
பூணுற்ற மன்றுள் புரிசபைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொன் கூத்தனை யார் உரைப்பாரே.

மாணிக்க மணி ஒளி போல, ஒளி வடிவாக நடமிடும் நாதனை, வளமிக்கு "ஈழத்துச் சிதம் பரம் அம்பலக்கூத்தன் திருநடனம் புரிபவனை, விரிசடை களாட விளங்கும் வேதாந்தக் கூத் தனை, எட்டித்தே உள்ள வெட்ட வெளி ஆகாசத்தில் விரிசடைக்கூத்தனை விரிசடை களாட ஆனந்த நடனமிடும் அண்ணலை உயர்ந்து பொன் போல் ஒளி நடம் புரிபவனை யார் அறிவார்?

**அன்பே சிவம்**

காரைநகர் நம் முன்னோர்கள் அன்பு நீர்பாய்ச்சி அறக்கதிர் விளைத்த பண்பு நலம் மிக்க வர்கள். வீரத்திற்கும் (அன்பிற்கும்) இருப்பிடமாக திகழ்ந்தது. ஈரமில்லாத மனித வாழ்வு பாலை நிலத்து வற்றல் மரம் தளிர்க்குமோ? அதுபோல் எவ்வுயிர்க்கும் தன்னுயிர்போல் மதிப்பவனே மாதேவன் உறையும மனம் பெற்றவன் அன்பும் சிவமும் ஒன்றே.

அன்பு வேறு, சிவம் வேறு, இரண்டும் ஒன்றே. அன்பே சிவம் என்பதனைப் பலர் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவத்தை விளங்கச் செய்வது. எல்லாரும் அறிந்த பின்பு அன்பே வடிவாய்ச் சிவமாம் நன்மையை அடைந்திருந்தார்.

**பொய்மை பேசாதீர் புவியில் மனிதர்கள் செய்தான்**
செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வான்
மைதாழ்த்து இலங்கு மனமிடற்றோனே

திருமந்திரம் 522

வளம் எல்லாம் தரும் கடல் சூழ்ந்துள்ள இவ்வுலகில் நடப்பது எல்லாவற்றையும் அறிவான். பொழுதெல்லாம் பெய்யே பேசிக்கொண்டும் புகழுரை செய்து தற்பெருமை பாராட்டிக் கொண்டு திரியும் மனிதர்களே! நீங்கள் உண்மையே பேசுவது என்று உறுதி செய்து கொண்டால் வானுலக தேவர்களும் வந்து உங்களை வணங்கச் செய்வான்.

"ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

**ஈசன் அடியார்க்கு இழிவு செய்வார்**
ஈசன் அடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமனர் பீடமும்
நாசம தாகும் நாம்நந்தி ஆணையே

பரம்பொருளுக்குத் தொண்டு செய்யும் மெய்யடியார்கள் மனம் கலங்கித் தவிக்க நேர்ந்தால் தேசமும் நாடும் இரண்டிலும் உள்ள செல்வவளம் சிறப்பெல்லாம் அழிந்திடும். இது நம் இறைவன் நந்தி நாயகன் இட்ட கட்டளை 'ஓம் திண்ணபுரச்சிவ'

**திருப்பல்லாண்டும் தேரோட்டமும்**

மார்கழித் திருவாதிரித் திருவிழாவில் எம்பெருமான் திருத்தேர் கொண்டருளும் போது, தேரைச் சேற்றில் தாழச் செய்தார். அப்பொழுது 'சேந்தா தேர் ஓட பல்லாண்டு பாடுக' என எல்லோரும் கேட்கும் படி விண்ணில் ஒலித்தது. தேர் "ஒரே ஒரு" அடியாராக நின்ற **சேந்தனார்** மன்னுக தில்லை வளர்க நம்பக்தர் எனும் தொடர்ப் பல்லாண்டில் இரண்டாவதாக பல்லா

"மிண்டு மனத்தவர் போ மின்கிலன்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்"

செருக்குக் கொண்ட மாறுபடப் பேசும் மனத்தை உடையவர்கள் போய் விடுங்கள் "மெய்யடியாராக இருப்பவர்கள்" விரைந்து வாருங்கள். சிவபெருமானிடத்துப் பேரன்பு செலுத்தி அவனருளைப் பெற்றும் தலைதலைமுறையாய் அடியார் கூட்டத்தில் கலந்து எம்பெருமானுக்குத் தொண்டு செய்யுங்கள். இறுதித்திருப்பாட்டில் எனது ஆணவம் முதலிய மலக்கட்டுகளை அழித்து என் அரிய உயிர்மீது அருள்பாலித்து அருளைப் புகழ்வோம் "ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

உடனே அந்நிலையில் எம்பெருமாள் திருத்தேரும் வடம் பிடிக்காமலே தானே அசைந்து ஓடி நிலையிறை அடைந்தது. இதுபோல் இங்கு திண்ணக்களி வைரவர் ஆலயம் முன் தாண்டு பல்லாண்டு பாட வடம் 'சிவ.சிவ. திண்ணபுரச்சிவ' எனத் தொட தேர் ஆடி அசைந்து இருப்பிடம் வந்ததை இது 2005 ஆம் ஆண்டு அருள்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனிசிறந்ததுவே"

நாம் பிறந்த நாட்டுடன் சங்கமித்து வாழும் போதே அதுவே தேவவுலக வாழ்விலும் பார்க்க அதிவிசேஷமாகும் என்பது வசிட்டர் ரிஷியின் வாக்கு. இறைவனைத் தாங்கி நிற்கும் ஆலயமும் அவரை உணர வைக்கும் பூசை, ஆராதனை, மந்திரங்களும் உலகை வாழ வைக்கின்றதோ! அதேபோல் நாம் வாழும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஈசன் அடியார்க்கு, மெய்யடியாருக்கு மனம் கலங்காமல் சிவதொண்டு செய்வோம் (திருமந்திரம்-534). விரைவில் காலம் தாழ்த்தாது புணருத்தானம் செய்து கும்பாபிஷேகம் கண்டு தரிசித்து ஆன்மாக்கள் யாவரும் பேரின்பப் பெருவாழ்வும் குவலயத்தில் உயர்ந்து வாழ்வர் என்பது திண்ணம். "ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப்பெயர்களால் சுட்டி அழைக்கப்பெறும் காரைநகர் சிவன்கோவிலுறை சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசப்பெருமானின் திருவருட் திறத்தையும் ஊர்ச்சிறப்பையும் அவ்வூர் வாழ் மக்கட்சிறப்பையும் அவர்கள் கொடைச்சிறப்பையும் இறைவனின் அருள் வழங்கும் சிறப்பையும் ஆற்றுப்படுத்தும் சிறப்பையும் வருங்கால நம் ஊர் இளையர்களுக்கு எடுத்துக்கூறி நல்நெறிப்படுத்தி அவர்களை ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடந்தேற பயனடையுமாறு அன்புடன் அழைப்போம். "ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

நிலையில்லாத உடம்பையும், செல்வங்களையும், உறுவுகளையும் நிலையானது என நம்பி ஏமாறாமல் மனித நேயத்துடன் அன்பே சிவமான நிலையான இறைவனை தொழுது சிவ. சிவ- திருமுறைகளை ஓதுவோம் திருவடி சேர்வோம்.

"ஓம் திண்ண புரச்சிவ கூத்தனே"

க.கு.க. சிவபாலன். போசகர்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

[சி-8012]

# இராசிபலன்

26.12.2023
மார்கழி 10, செவ்வாய்க்கிழமை
பூரண பின்னிரவு 6.14 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 10.58 மணிவரை

சுபநேரம் -10.57-12.27 மணிவரை
இராகுகாலம்-3.27-4.57 மணிவரை
இரவு நடேசர் ஆருத்திரா அபிசேகம்,
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்-
சுவாதி, விசாகம்.

வளவன்

**மேஷம்** உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வார்த்தைகளால் மற்றவர்களை கவர்வீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிறர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** தந்தை வழி உறவில் மனநிறைவான சம்பவமொன்று இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம், பயணங்களின் போது நிதானம் தேவை, மனச் சஞ்சலங்கள் கூடும் நாள்.

**தனுசு** குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய பொருள் சேர்க்கையுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**கும்பம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் ஆனால் முயலாமை எப்போதும் வெல்லாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள் படம் மீது முட்டை வீச்சு



(வவுனியா)

வவுனியாவில்நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் புகைப்படங்களின் மீது போராட்டக்காரரால் முட்டை வீசப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "உலகத் தமிழர் பேரவையினரின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு விரோதமானது எனவும் அவர்கள் இமாலய துரோகிகள் எனவும் தெரிவித்திருந்ததோடு தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் இறைமையும் பாதுகாப்பதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றே உரிய தீர்வு எனவும் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் அங்கு மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் புகைப்படம் மீது முட்டை வீசி தமது எதிர்ப்பினையும் வெளிப்படுத்தி இருந்தனர். (5-6)

# ரூ.14 மில்லியன் பெறுமதியான கேரள கஞ்சா யாழில் மீட்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணம்வடமராட்சிவெற்றிலைக்கேணி பகுதியில் ரூ.14 மில்லியன் பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் கரை ஒதுங்கிய சாக்கு மூட்டை ஒன்று மீட்கப்பட்டது. அந்த சாக்கு மூட்டையை சோதனை செய்த கடற்படையினர், 16 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 35 கிலோ 100 கிராம் கேரள கஞ்சாவை கண்டுபிடித்தனர். கேரள கஞ்சா மேலதிக நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (5-6-33-60)

# காணி மத்தியஸ்தர் சபை ஊடாக வவுனியாவில் 238 காணிப் பிணக்குகள் தீர்வு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் விசேட காணி மத்தியஸ்தர் சபை ஊடாக 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் 5 ஆவது வருட பூர்த்தி நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையானது ஆரம்பித்து 5 வருடத்தை பூர்த்தி செய்கிறது.

அந்த வகையில் வவுனியா மாவட்ட காணி மத்தியஸ்தர் சபையில் கடந்த 5 வருடங்களில் ஆயிரத்து 184 காணிப் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

260 காணிப் பிணக்குகள் இரு பகுதியினரின் இணக்கப்பாட்டுடன் தீர்வு காண முடியாத நிலையில் அவற்றுக்கு தீர்க்கப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (5-6-250)

# போதைக்கு அடிமையான 8 பேர் கந்தக்காடு முகாமிற்கு அனுப்பிவைப்பு

(சாவகச்சேரி)

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் போதைக்கு அடிமையான எட்டுப் பேர் அடையாளம் காணப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

போதை ஒழிப்பு வாரத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனை நடவடிக்கைகளின் ஊடாக சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் கஞ்சா போதைப் பொருளுடன் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (5-6-30-33)

## கருத்தரங்கு

(கரணவாய்)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் காலை 9 மணி முதல் 1 மணிவரை நெல்லியடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் லயன். பி.ருவேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையத்தின் பிராந்திய உதவிப்பணிப்பாளர் கிருஷ்ண பிள்ளை கந்தவேள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (5-6-60)

## திருவாசக முற்றோதல்

(கரணவாய்)

நாகர்கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (5-6-60)

## புதையல் தோண்டிய சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

வாழைச்சேனைப் பகுதியில் புதையல் தோண்டிய 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களும் உபகரணங்களும் மேலதிக விசாரணைகளுக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (5-6)

# இறைச்சிக்காக வெட்டப்பட்ட பசு



(தருமபுரம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் இறைச்சிக்காக பசு மாடு ஒன்று வெட்டப்பட்டது.

வீட்டுபட்டியில் நேற்று முன்தினம் கட்டிவைத்திருந்த கன்று ஈன்றும் நிலையில் இருந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான [illegible] இறைச்சிக்காக வெட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பல பகுதிகளில் கால்நடை திருட்டு அதிகரித்துள்ளதாகவும் எனவே இது தொடர்பாக கால்நடை உரிமையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் [illegible] ஸார் அறிவித்துள்ளனர். (5-6-316)

## யாழில் கைதிகள் 16 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 16 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ.உதயகுமார் தலைமையிலான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதி [illegible] யனுப்பிவைத்தனர். (5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 600 | 500 | 700 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 700 | 650 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 180 | 150 |
| கோவா | 450 | 480 | 400 | 480 |
| கரட் | 400 | 540 | 550 | 700 |
| பூசணி | 160 | 180 | 150 | 200 |
| புடோல் | 320 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 220 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 380 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 550 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 500 |
| லீக்ஸ் | 400 | 380 | 450 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 700 |
| கறிமிளகாய் | 650 | 650 | 500 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 550 | 450 | 650 | 600 |
| கத்தரிதம்புள்ள | 550 | 300 | 400 | 650 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 500 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 500 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 220 | 200 | 200 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 200 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலங்களில் இனிப்பு பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் இனிப்பு வகைகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக இனிப்பு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



சக்கரை, அரிசி, தேங்காய், எண்ணெய் உள்ளிட்ட இனிப்பு வகைகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை உயர்வே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு நத்தார் பண்டிகையின் போது அதிகளவான இனிப்பு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு சடுதியாக விற்பனை குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, இனிப்பு முறுக்கு 130 ரூபாய், குக்கீஸ் 130 ரூபாய், தேன் குழல் 60 ரூபாய், கேக் ஒரு கிலோ 1200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைக் காலங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (5-6)

# ஜனவரியில் மதுபானத்தின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் மதுப்போத்தல் ஒன்றின் விலை 90 முதல் 150 ரூபாவால் அதிகரிக்குமென மதுபான நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

எத்தனால், வெற்று மதுபான போத்தல்கள், மதுபான லேபிள்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட மதுபானம் அடங்கிய போத்தல்கள் மீதான வற் வரியைச் சேர்த்தமையே இதற்குக் காரணம் என நிறுவனங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதன்படி, தற்போதைய விற்பனை விலையான 3260 ரூபாவைக் கொண்ட விஷேட வகை (கல்) மதுபான போத்தல் ஒன்றின் விலை 90 ரூபாவினால் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (5-6)

# சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

## விஜயதாச

(கொழும்பு)

நடைமுறையில் சட்ட ரீதியில் அமுல்படுத்தப்படும் நடவடிக்கையால் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போதைப் பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையால் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

எவ்வாறாயினும் இது நீதிமன்ற நடவடிக்கையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதற்காக சில சுற்று நிருபங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி சிறையில் இருக்கும் கைதிகளின் தண்டனை காலத்தையும் விளக்கமறியல் கைதிகளின் தண்டனை காலத்தையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (5-6)

# பிரான்ஸில் இருந்து நாடு கடத்தப்பட்ட 14 இலங்கையர்கள்

(கொழும்பு)

பிரான்ஸிலிருந்து 14 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்ட நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் பிரான்ஸ் சென்ற நிலையில், அவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் படகு மூலம் பிரான்ஸின் ரீயூனியன் தீவிற்கு சென்ற 7 இலங்கையர்கள் உட்பட 14 பேர் இவ்வாறு இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

21 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களே நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(5-6)

# சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும்



(கொழும்பு)

அரசியலமைப்பின் பிரகாரம் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், கடுமையாக உழைக்கும் மலையக மக்களுக்கு உரிய மரியாதையும் பலமும் கிடைக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவுக்கூறும் வகையில், நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற "200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி" என்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மலையக தொழிலாளர் சமூகத்தை தேயிலை தொழில் முயற்சியாளர்களாக உருவாக்குவதே தமது நோக்கமாகும்.

அத்துடன், துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து நாட்டுக்கு அந்நிய செலாவணியை தேடித்தந்து பலம் சேர்க்கும் மலையக மக்களுக்கு தமது நன்றிகளையும் பாராட்டையும் தெரிவிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (5-6)

# ரூ.70 லட்சம் பெறுமதியான தங்கநகைகள் திருட்டு

(கொழும்பு)

உடப்புவ புனவிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை பிரதேசவாசிகள் இல்லாத வேளையில் சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கம் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாக உடப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

புனவிட்டிய தேவாலயத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஆராதனைக்கு சென்று விட்டு நேற்று அதிகாலை வீடு திரும்பிய போது வீட்டில் இருந்த தங்கமும் பணமும் திருடப்பட்டமை உறுதி செய்யப்பட்டதையடுத்து குறித்த வீட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (5-6)


13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21 . 06 . 1956

அரக்கரின் அழிப்பில் 26 . 12 . 2010

அமரர். மார்க்கண்டு சிவலிங்கம்

Bsc Agri,SLEAS-II

[பிரதிக்கல்விப் பணிப்பாளர்–வலிகாமம் கல்வி வலயம்]

அம்மா ராசா என்றழைக்கும் குரல் எங்கே?
அணைத்து உறங்க வைக்கும் நெஞ்சம்தான் எங்கே?
பாடங்களும் கதைகளும் படித்த மடிதான் எங்கே?
பாசமாய் வளர்த்தெடுத்த தெய்வம் எங்கே?
காலை எழுந்தவுடன் யோகா செய்விக்கும் ஜோதியே நீ எங்கே?
காலம் தவறாமல் உணவளித்த ஆரோக்கியவான் எங்கே?
வீட்டுக்கொரு பூந்தோட்டம் அமைத்த புதுமையானவர் எங்கே?
உலகில் எப்படி உழைப்பதென்ற உழைப்பாளி எங்கே?
விவேகானந்தர் போல வீர மக்களாக்க வீறு கொண்டவர் எங்கே?
கல்விச் செல்வம் தான் எம் ஆயுத மென்ற கலங்கரையே எங்கே?
கருணையிலாது கொன்றழித்த கயவா நீ எங்கே?

[illegible], பண்டிதர் வீதி,
[illegible] மேற்கு உரும்பிராய்.

(18317) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 2 தொன் வெங்காயத்தில் உருவான கிறிஸ்மஸ் தாத்தா

(டில்லி)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, ஒடிசா மாநிலம் பூரி கடற்கரையில் மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், 2 தொன் வெங்காயம், மணலைக் கொண்டு கிறிஸ்மஸ் தாத்தாவை வடிவமைத்துள்ளார்.

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்த ஒடிசா மாநிலத்திலுள்ள, பூரி கடற்கரையில், மணற் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக், மணற்சிற்பம் அமைத்து வருவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

நேற்று கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப் படுவதை முன்னிட்டு, பூரி கடற்கரையில், 2 தொன் வெங்காயம் மற்றும் மணலைக் கொண்டு கிறிஸ்மஸ் தாத்தா மணற் சிற்பத்தை உருவாக்கியுள்ளார். (5-6)




## அமைதிக்கான ஆண்டாய் மலரட்டும் போப் பிரான்சிஸின் கிறிஸ்மஸ் வாழ்த்து



(வோஷிங்டன்)

2023 கிறிஸ்மஸின் தொடக்கம் அமைதிக்கான தொடக்கமாக அமையட்டும் என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வத்திகான் நகரில் உள்ள தேவாலயத்தில் கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்தினம் நடத்தப்படும் வருடாந்த கூட்டுப் பிரார்த்தனையின் போது உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் தனது உரையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் போர் தீவிரம் பெற்று வரும் நிலையிலேயே போப் பிரான்சிஸ் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

பலத்தைக் காட்டுவது மூலம் நீதி கிடைத்து விடாது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை பாலஸ்தீன நகரான பெத்லகேமில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளன.

அங்குள்ள மாங்கர் சதுக்கத்தில் பாரம்பரியமாக வைக்கப்படும் கிறிஸ்மஸ் மரத்துக்குப் பதில் கம்பிகளும் இடிபாடுகளைப் பிரதிபலிக்கும் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (5-6)

## இஸ்ரே
## காசா அ

(காசா)

காசாவின் அ
இஸ்ரேல் நடத்தி
70 பேர் கொல்
அமைச்சு அறிவி



## இந்தியப் பெருங்கடலில் சிக்கியுள்ள ரொஹிங்கிய அகதிகளை மீட்குமாறு

### ஐ.நா வலியுறுத்து



(நைப்பியிதோ)

இந்திய பெருங்கடலில் படகொன்றில் நிர்க்கதிக்குள்ளான 185 பேரை அவசரமாக மீட்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய பெருங்கடலின் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் இவ்வாறு நிர்க்கதிக்குள்ளாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த படகில் உள்ளவர்களில் 70 சிறுவர்கள் மற்றும் 88 பெண்கள் அடங்குவதாக ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

இதில் ஒருவர் உயிரிழுந்துள்ள நிலையில், பெருமளவானவர்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக அஞ்சப்படுகிறது.

குறித்த படகில் இருப்பவர்கள் ரொஹிங்கிய அகதிகள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அவர்களை அவசரமாக மீட்குமாறு அப்பகுதியில் உள்ள அனைத்து கடலோர அதிகாரிகளுக்கும் ஐ.நா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மியன்மாரில் கடுமையாக துன்புறுத்தலுக்கு உள்ளான ஆயிரக்கணக்கான ரொஹிங்கிய அகதிகள் ஒவ்வொரு ஆண்டும் ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொண்டு மலேசியா அல்லது இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தஞ்சமடைய முயற்சிக்கின்றனர்.

இதன்படி, கடந்த 2022 ஆம் ஆண்டில் 2000 இற்கும் மேற்பட்ட ரொஹிங்கிய அகதிகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டதாக நம்பப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு முதல் இதுவரை ரொஹிங்கிய அகதிகள் உட்பட 570 இற்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், உயிர்களைக் காப்பாற்றுவதற்காக சரியான நேரத்தில் முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் பாரிய துயரத்தைத் தடுக்க முடியும் என ஐ.நா தெரிவித்துள்ளது. (5-6)

## இந்தோனேசியாவில் வெடி விபத்து 13 பேர் பலி, 38 பேர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நிக்கல் தொழிற்சாலை ஒன் றில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 13 பேர் உயிரி ழந்ததோடு, 38 பேர் படுகாயம் அடைந்துள்ள னர்.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் தனியார் தொழிற்சாலை வளாகத்தில் நிக்கல் கனிமம் உருக்கும் ஆலை ஒன்றும் செயற்பட்டு வந்தது.

இந்த நிக்கல் தொழிற்சாலையில் தொழிலாளர் கள் சிலர் புகைப்போக்கி களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டி ருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதம வெடி விபத்து ஏற்பட்டு அடுத்தடு புகை போக்கிகளிலும் வெடி த்து நிகழ்ந்தது.

இது குறித்து தகவ அறிந்ததும் உடனடியாக மீ படையினர் விரைந்து வந்து தீ கட்டுக்குள் கொண்டு வந்தனர்

இருப்பினும் அதற்குள் தொழிலாளர்கள் உயிரிழ தோடு 38 இற்கும் மேற்பட்டே படுகாயம் அடைந்தனர். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் அகதிகள் முகாமில் 70 பேர் பலி

**அல்-மகாஜி அகதிகள் முகாம் மீது த்திய விமானத் தாக்குதலில், சுமார் ால்லப்பட்டுள்ளதாக காசா சுகாதார றிவித்துள்ளது.**





இதேவேளை அந்த பகுதியில் அதிகளவான குடும்பங்கள் வசித்து வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் காயமடைந்த மேலும் பலர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதாக ஹமாசின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மக்கள் அடர்த்தியான குடியிருப்பு தொகுதி அழிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல்-குத்ரா தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதலால் மேற்கு கரையில் உள்ள இயேசு பிறந்த பெத்லகேமில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் இன்றி களையிழந்து காணப்படுகிறது.

இதற்கிடையில் 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும் 384 பேர் காயமடைந்துள்ளதாகவும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இரண்டாம் கட்ட போர் நிறுத்தத்திற்கு எகிப்து தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

---

## த்து யம்

-டுபட்டிரு

விதமாக டுத்தடுத்த வெடி விப

தகவல் ாக மீட்பு ந்து தீயை ந்தனர். குள் 13 யிரிழந்த ற்பட்டோர் (5-6)



---

# போர்த் தாக்குதலை நிறுத்தாமல் கைதிகளின் விடுவிப்பு சாத்தியமற்றது

## ஹமாஸ் இராணுவம்



(காசா)

காசாவில் இஸ்ரேல் நோக்கம் தோல்வியடையும் எனவும் போர்த்தாக்குதலை நிறுத்தாமல் பணயக் கைதிகள் விடுவிப்பு சாத்தியமற்றது எனவும் ஹமாஸ் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் நடவடிக்கையில் இதுவரை பெண்கள், குழந்தைகள் என சுமார் 20,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழித்து பணயக் கைதிகளை விடுவிக்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், காசாவில் உள்ள ஹமா[illegible] னரை அழிக்கும் இஸ்ரேலிய இராணுவத்தின் நோக்கம் தோல்வியில் நிறைவடையும் என ஹமாஸ் இராணுவப் பிரிவு செய்தித் தொடர்பாளர், அபு உபைதா அறிவித்துள்ளார்.

அத்துடன் காசாவில் போர்த்தாக்குதலை நிறுத்தாமல் பணயக்கைதிகள் விடுவிப்பு என்பது சாத்தியமற்றது எனவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிப்பு மற்றும் தொடர் தாக்குதல்கள் பணயக் கைதிகளை வீட்டிற்கு அழைத்து வராது, பேச்சுவார்த்தைகள் மட்டுமே பணயக் கைதிகளை உயிருடன் கொண்டு வருவதற்கான ஒரே வழி எனவும் ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய தகவல் படி, தற்போது ஹமாஸ் படையினரின் பிடியில் 129 பண [illegible] தக்கது. (5-6)

---

# எக்ஸ் செயலி மூலம் பணப்பரிமாற்றம்

## மஸ்க் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

எக்ஸ் செயலியில் பணபரிமாற்றம் செய்யும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அந்நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க் டுவிட்டர் தளத்தை வாங்கியதில் இருந்தே பல்வேறு அதிரடி மாற்றங்களை மேற்கொண்டு வருகிறார்.

அந்தவகையில் தற்போது எக்ஸ் செயலியில் பணப்பரிமாற்றம் செய்யும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எலான் மஸ்க் தெரிவிக்கையில்,

"எக்ஸ் செயலி மூலம் மற்றவர்களுக்கு பணப்பரிமாற்றம் செய்யும் உரிமம் பெற அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறோம்.

இறுதி ஒப்புதல் வந்த பிறகு அடுத்த ஆண்டின் (2024) நடுப்பகுதியில் எக்ஸ் செயலி மூலம் பணப்பரிமாற்றம் செய்ய முடியும்." எனத் தெரிவித்தார். (5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### புனர்பூசம் 4 ஆம் பாதம்
### தொழிலில் முன்னேற்றம்

தன, புத்திர, ஞானகாரகனான குருவின் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் முதல் 3 பாதங்களில் பிறந்தவர்களுக்கு புதன் இராசிநாதனாகவும் 4 ஆம் பாதத்தினருக்கு சந்திரன் இராசிநாதனாகவும் உள்ளனர். உங்கள் நட்சத்திர நாதனுக்கு சனி நட்பானவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்கக் கூடியவரா கிறார்.

புனர்பூசம் 4ஆம் பாதத்தினருக்கு அஷ்டம ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார். 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு முயற்சிக்கேற்ற பலன்களை வழங்குவார். வாகனப் பயணத்தில் சங்கடத்தை ஏற்படுத்துவார். பணியாளர்களுக்கு விரும்பாத இடமாற்றத்தை ஏற்படுத்துவார். அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வைத்து அதனால் பிரச்சினைகளை உருவாக்குவார். இதுவரை இருந்த பெயர், புகழ், செல்வாக்கில் இறங்கு முகத்தை உண்டாக்குவார்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20. 2023 - பெப் 15. 2024 வரையிலும் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 மற்றும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்ட பலன்களை வழங்குவார். தொட்டதெல்லாம் வெற்றி. முயற்சியில் லாபம் உண்டாகும். விருப்பங்கள்நிறைவேறும் 4ஆம்பாதத்தினருக்கு அஸ்தமனம், வக்கிரம காலங்களில் நெருக்கடிகளில் இருந்து பாதுகாப்பார். வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு கேதுவால் முன்னேற்றம் உண்டாகும். முயற்சிகள் வெற்றியாகும். வருமானம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 4 ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் மே 1. 2024 - மே 13. 2025 வரை 4ஆம் பாதத்தினருக்கு விரய ஸ்தானத்திலும் குருபகவான் சஞ்சரிக்கிறார். 4ஆம் பாதத்தினருக்கு மே 1.2024 - மே 13.2025 காலத்தில் அபரிமிதமான யோகத்தை உண்டாக்குவார். தொழில், குடும்பம், உத்தியோகம் என எல்லாவற்றிலும் முன்னேற்றம் தருவார்.

**தொழில்**

மருத்துவம், கல்வி, இயந்திரத் தொழிற்சாலைகள், வியாபார நிறுவனங்கள், எலக்ட்ரிக்கல், கம்யூட்டர் தொழில்கள் வளர்ச்சி பெறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். தொழிலில் அபரிமிதமான முன்னேற்றம் பெறும் காலமாக அமையும்.

**பணியாளர்கள்**

திறமைக்கு மதிப்பில்லை, என்னதான் உழைத்தாலும் உயர்வில்லை என்று வருத்தப்பட்ட நிலை மாறும். இனி உங்கள் உழைப்பிற்கு மதிப்புண்டாகும். சிலருக்கு புதிய பொறுப்புகள் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். கலைஞர்கள், ஆன்மிகப் பேச்சாளர்கள், கல்வியாளர்களின் நிலை உயரும்.

**கல்வி**

கல்வியில் அக்கறை கொண்ட உங்களுக்கு இக்காலத்தில் ஆசிரியர்களின் ஆலோசனை நன்மை தரும். உயர் கல்வி கனவு நிறைவேறும். போட்டித் தேர்வில் பங்கேற்பவர்கள் மற்ற சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

**உடல்நிலை**

இதற்கு முன்பிருந்த பாதிப்பு விலகும். விபத்து, பக்கவாதம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை காரணமாக எழுந்து நடமாடத் தொடங்குவர். சிலருக்கு மூச்சுத் திணறல், நரம்பு பிரச்சினை ஏற் பட்டு சரியாகும்.

**குடும்பம்**

குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு திட்டமிடுவீர்கள். புதிய வாகனம், வீடு என நீண்டநாள் கனவு நிறைவேறும். தந்தையின் ஆதரவு அதிகரிக்கும். தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உறவினர் வருகை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும்.

**பரிகாரம்**

நரசிம்மரை வணங்க வாழ்வு செழிக்கும். சங்கடங்கள் விலகும்.

**பூசம் விழிப்புணர்வு அவசியம்**

ஆயுள்காரகன், தொழில்காரகன் என்று கூறப்படும் சனிபகவான் மற்றும் மனக் காரகனான சந்திரனின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிசெ.20. 2023 முதல் ஆயுள், அஷ்டம ஸ்தானமான 8ஆம் இடத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான்.

உங்கள் நட்சத்திர நாதன், இராசிநாதன் சந்திரனுக்குப் பகையானவர் என்றாலும் சனிபகவான். 8ஆம் ஸ்தானத்தில் அவர் சஞ்சரிக்கும் காலத்தில் வீண் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவ குறைவு ஏற்படும். தேவையற்ற இடமாற்றம் உண்டாகும். வரு மானத்தில் தடைகள் ஏற்படும். பணத் தேவை அதிகரிக்கும். அனைத்திலும் தடைகள், தாமதம் என்ற நிலை உரு வாகும். சிலருக்கு வெளியூரில் வசிக்கும் நிலை ஏற்படும். வீண் அலைச்சல், பண விரயம் ஏற்படும். தம்பதியரிடையே கருத்து வேறுபாடு, உறவில் விரிசல் தோன்றும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். முயற்சிகளில் இழுபறி உண்டாகும் என்பது பொது விதி. ஆனாலும் உங்கள் நட்சத்திர நாதனின் சொந்த வீடான கும்பத்தில் சஞ்சரிக்க இருப்பதால் இத்தகைய நிலைகளை அப்படியே உங்களுக்கு உண்டாக்க மாட்டார்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19. 2024 வரையிலும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2. 2025 வரையிலும் நவ 17. 2025 - மார்ச் 6. 2026 வரையிலும் மற்றும் அஸ்தமனம் வக்கிர காலங்களிலும் அஷ்டம சனியின் பாதிப்பு இருக்காது. திட்டமிட்டு செய்யும் காரியங்களில் வெற்றி உண்டாகும். பிரச்சினைகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபட முயல்வீர்கள். மேற்சொன்ன காலங்களில் எதிர்பார்க்காத அதிர்ஷ்டப் பலன்களை அடைவீர்கள்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் இதுநாள் வரை இருந்த துன்பங்கள் காணாமல் போகும். தேவையான பணம் வரும். உடல் உபாதைகள் விலகும். தொழிலில் இருந்த தடைகள் மறையும். வேலை தேடியவர்களுக்கு வெற்றி கிடைக்கும். சிலர் புதிய தொழில் தொடங்குவர். ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் போது உடல் பாதிப்பு ஏற்படும். வேலையில் சங்கடம் தோன்றும். பணவரவில் தடையுண்டாகும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். குடும்பத்தில் குழப்பம், பிரச்சினை அதிகரிக்கும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை ஜீவன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் பணியில் நெருக்கடி தோன்றும். விரும்பாத இடமாற்றம், வழக்கு என சங்கடங்கள் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தடைகளும் பொருளாதார நெருக்கடியும் தோன்றும். மே 1. 2024 - மே 13.2025 காலத்தில் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் செல்வாக்கை மீண்டும் அடைவீர்கள். பதவி உயர்வு. விரும்பிய இடமாற்றம், குடும்பத்தில் சுப நிகழ்ச்சி, தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம். எதிர்பார்த்த லாபம் காண்பீர்கள். மே 14.2025 முதல் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் அலைச்சலும் செலவும் அதிகரிக்கும் என்றாலும் அவருடைய பார்வைகளால் நிம்மதியான நிலையும் எதிர்ப்பு இல்லாத வாழ்க்கையும் உடல் நிலையில் முன்னேற்றமும் உண்டாகும்.

**பொதுப்பலன்**

அஷ்டம சனி என்றாலும் ஏப் 26. 2025 வரை கேதுவின் அனுக்கிரகம் உங்கள் வாழ்க்கையை வளமாக்கும். நெருக்கடிகள் மறையும். மே 1. 2024 - மே 13. 2025 வரையிலும் லாப ஸ்தான குருவால் செல்வாக்கு உயரும். பொருளாதார நிலை உயரும். அனைத்திலும் வெற்றி உண்டாகும். மே13.2025 இற்குப் பின் செயல்களில் நெருக்கடி, வழக்கு, வீண் செலவுகள், தொழிலில் வருமானமின்மை, வரவை விட செலவு அதிகம் என்ற நிலை உண்டாகும். சிலருக்கு வாகனப் பயணத்தில் சங்கடம் ஏற்படலாம். இக்காலத்தில் பிறருக்கு ஜாமின் கையெழுத்திடுவதாலும், பத்திரங்களை முழுமையாக படித்துப் பார்க்காமல் கையெழுத்திடுவதாலும் சட்ட சிக்கல்களுக்கு ஆளாக வேண்டி வரும்.

**தொழில்**

தொழிலில் உழைப்பு அதிகரிக்கும். புதிய முதலீடு லாபம் தரும். போட்டியாளர்கள் உங்கள் பாதையிலிருந்து விலகுவர்.




## 20.12.2023-06.03.2026

இயந்திரத் தொழிலில் லாபம் உண்டாகும். விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆதாயம் தரும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**பணியாளர்கள்**

பணிபுரியும் இடத்தில் நெருக்கடிகள் தோன்றும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். செய்யாத தவறுக்கு பொறுப்பாக வேண்டிய நிலை ஏற்படும். மேலதிகாரியை அனுசரித்துச் செல்வதும் உடன் பணி புரிபவர்களின் ஆலோசனையை ஏற்பதும் நன்மையளிக்கும்.

**கல்வி**

ஆசிரியர்களின் ஆலோசனையால் வளர்ச்சி காணலாம். கல்வியும் வேலையும் வாழ்வின் அடிப்படை என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். பொதுத் தேர்வு, போட்டித் தேர்வில் உங்கள் கடின முயற்சி வெற்றி தரும்.

**உடல்நிலை**

பரம்பரை நோய்கள் கட்டுக்குள் இருக்கும். சிலருக்கு உஷ்ணம், தோல் தொடர்பான நோய்கள், மூட்டுவலி, இடுப்புவலி ஏற்படலாம். சிலருக்கு சிறுசிறு விபத்துகள் உண்டாகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

**குடும்பம்**

பணி, தொழில் போன்றவற்றில் நெருக்கடிகளை சந்தித்தாலும் குடும்பத்தின் மீது அக்கறை அதிகரிக்கும். புதிய இடம் வாங்குதல், வீடு கட்டி குடியேறுதல் என்ற உங்கள் கனவு நிறைவேறும். சிலர் விரும்பிய வாகனத்தை வாங்குவர். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

பரிகாரம் சனிக்கிழமைகளில் சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தீபமேற்றி வழிபட நன்மை அதிகரிக்கும்.

ஆயிலியம் வித்யாகாரகன் எனக் கூறப்படும் புதன் பகவான், மனக்காரகனான சந்திரனின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிசெ.20.2023 முதல் 8ஆம் இடமான ஆயுள், அஷ்டம ஸ்தானத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

இவர் உங்கள் இராசிநாதனுக்குப் பகையானவர் என்பதுடன் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவர். 8ஆம் வீடான அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் உழைப்பு அதிகரிக்கும். எந்த ஒன்றையும் அலசி ஆராய்ந்து அதன் பிறகே ஒரு முடிவிற்கு வருவீர்கள். உங்கள் சாதுரியத்தால் நினைத்ததை சாதிக்கக்கூடிய நிலை உண்டாகும். சில சங்கடங்கள் வந்தாலும் அவற்றிலிருந்து மீண்டு வரக்கூடிய வல்லமை ஏற்படும். பண முதலீட்டை விட உங்கள் உழைப்பை நம்பி செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான டிசெ.20. 2023 - பெப்.15. 2024. வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29.2025 - ஜூலை 2. 2025 வரையிலும் நவ.17. 2025 - மார்ச் 6.2026 வரையிலும் மற்றும் அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் அஷ்டம சனியின் பாதிப்புகளில் இருந்து விடுபடுவீர்கள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். பணவரவு அதிகரிக்கும். நீண்ட நாளாக இருந்த பிரச்சினை முடிவிற்கு வரும். சிலர் வெளியூரில் வசிக்கும் நிலை ஏற்படும். சொத்துச் சேர்க்கையும் பொறுப்புகளும் உண்டாகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றம் உண்டாகும். முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இழந்த பொருட்கள், செல்வாக்கை மீட்டெடுப்பீர்கள். தொட்டதெல்லாம் பொன்னாகும். ஏப்.26. 2025 முதல் ராகு 8ஆம் இடத்திலும் கேது 2ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் எதிர்பாராத சங்கடம், நெருக்கடி தோன்றும். தொழில், வியாபாரத்தில் லாபம் என்பது கேள்விக்குறியாகும். குடும்பத் திலும் நிம்மதி இல்லாமல் போகும். உடல் நிலையில் சங்கடம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் உத்தியோகத்தில் சங்கடம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். வருமானத்தில் நெருக்கடி தோன்றும். சிலருக்கு வேலையில் மெமோ வாங்க வேண்டிய நிலை ஏற்படும். மே 1. 2024 - மே 13. 2025 வரையிலும் 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் எல்லாவித சங்கடங்களும் விலக ஆரம்பிக்கும். செல்வாக்கை மீண்டும் அடைவீர்கள். அந்தஸ்து உயரும். பதவி உயர்வு கிடைக்கும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். குடும்பத்தில் விசேஷங்கள், தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம், பணவரவு உண்டாகும். மே 14. 2025 முதல் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் பலவழியிலும் செலவு அதிகரிக்கும். என்றாலும் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்ப்பு விலகும்.

**பொதுப்பலன்**

அஷ்டம சனியின் காலம் என்றாலும் கேது பகவானின் சஞ்சாரமும் குரு பகவானின் அருளும் இக்காலத்தில் பெருமளவில் பாதுகாக்கும். அஷ்டம சனியின் தாக்கத்திலிருந்து உங்களுக்கு விடுதலை உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு உயர்பதவிக்குரிய வாய்ப்பு உண்டாகும். திட்டமிட்ட முயற்சிகள் வெற்றியாகும். வாழ்வில் இதுவரை இல்லாத அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டாகும். வழக்குகளில் சாதக நிலை ஏற்படும். அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும்.

**தொழில்**

தொழில், வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்கு தீர்வு காண்பீர்கள். உங்கள் அணுகுமுறை லாபத்தை ஏற்படுத்தும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். விவசாயத்தில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். இயந்திரம், எலக்ட்ரானிக்ஸ், கம்யூட்டர், பப்ளிகேஷன்ஸ், ரியல் எஸ்டேட், பங்குச்சந்தை, போன்ற தொழில்கள் வளர்ச்சியடையும்.

(11ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சனிப்பெயர்ச்சி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பணியாளர்கள்**

கடந்த கால அனுபவத்தைக் கொண்டு சாதுர்யமாக செயற்படுவீர்கள். உங்கள் பிரச்சினைகளை மேலிடத்தில் பக்குவமாக சொல்லித் தீர்வு காண்பீர்கள். எதிர்பார்த்த பொறுப்பு, ஊதிய உயர்வு உண்டாகும். மேலதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**கல்வி**

வித்யாகாரகனின் நட்சத்திரத்தில் பிறந்தவர்களான நீங்கள் இயல்பாகவே கல்வியில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பீர்கள் என்றாலும் ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்று செயற்பட்டால் தேர்வில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். சிலருக்கு வெளியூர், வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்புண்டாகும்.

**உடல்நிலை**

உடல் நிலையில் சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் ஏற்படும். நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறு, இதய பாதிப்பு சிலருக்கு ஏற்படலாம். பித்தம், மயக்கம், ஜலதோஷம் சங்கடப்படுத்தும். அவற்றிலிருந்து சிகிச்சையால் நிவாரணம் கிடைக்கும்.

**குடும்பம்**

திட்டமிட்டு செயற்பட்டு குடும்பத்திலுள்ள சங்கடங்களை அகற்றுவீர்கள். தம்பதிக்கிடையே ஒற்றுமை அதிகரி க்கும். வசதியான வீட்டிற்கு குடிபுகும் நிலை சிலருக்கு ஏற்படும். நீண்ட நாளாக தடைப்பட்ட சுபநிகழ்ச்சி நடந்தேறும். நவீன பொருட்கள், வாகனம் வாங்கும் நிலை உண்டாகும். சிலருக்கு வேலைக்காக வெளிநாடு செல்லும் நிலை ஏற்படும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும்.

பரிகாரம்:சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்கு நல்லெண்ணெய்தீபம் ஏற்றிவர தடை விலகும்.

# மரக்கடத்தல் முறியடிப்பு

## இருவர் கைது

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பகுதியில் களவாக மரங்கள் கொண்டு சென்ற நபர் களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

முக்கொம்பனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மரங்களுடன் சென்ற வாகனத்தினை பூநகரியில் வைத்து சோதனைக்குட்படுத்திய போது மரங்கள் கொண்டு செல்லப்படுவது கண்டறியப் பட்டது.

இதன் போது மரங்கள் கொண்டு சென்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (5-6-350)



# தருமபுரத்தில் அதிகளவான கால்நடைகள் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

தருமபுரம் பகுதியில் கால்நடை பண்ணையொன்றில் வெள்ளத்தின் காரணமாக 50 இற்கும் மேற்பட்ட கோழிகளும் ஐந்து ஆடுகளும் உயிரிழந்துள்ளன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகின்றது.

இந் நிலையில் வெள்ள நீர் வடிந்த பின் தொற்று நோய் காரணமாக நான்கு ஆடுகள் இறந்துள்ளதாகவும் அதில் இரண்டு ஆடுகள் தற்பொழுது கடும் நோய் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக கால்நடை மருத்துவர்கள் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)

# சந்தை வளாகத்தில் கொட்டப்படும் கோழி இறைச்சி கழிவுகள்

## பொதுமக்கள் அசௌகரியம்

(குருமன்காடு)

வவுனியா, பூந்தோட்டம் பொதுச்சந்தையில் கோழிக் கழிவுகளை சிலர் கொட்டுவதால் அந்த பகுதியில் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது என பொதுமக்கள் தெரிவித் தனர்.

அண்மைய நாட்களாக பொதுச்சந்தை வளாகத்தில் கோழி இறைச்சியின் கழிவுகளை இனந் தெரியாத நபர்கள் சிலர் வீசிச் செல்கின்றனர்.

இதனால் அந்த பகுதியில் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

வீசப்படும் கழிவுகளை மிருகங்கள், பறவைகள் காவிச் செல்வதால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது. (5-6)




சார்மிகா




சாருஜா




கிருசாந்தன்




மாலவி




மோனிசா




ஆர்த்திகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 2

காவியத் தொடர் 363





கிறது. எனக்குத் தஞ்சைக் கோட்டைக் காவல் கிடைக்கிற வழி என்ன? நான் தான் இந்த ஊரில் வந்து இப்படி அகப்பட்டுக் கொண்டேனே?" என்று வந்தியத் தேவன் மிகவும் சோகமான குரலில் கூறினான்.

"ஏன் அகப்பட்டுக் கொண்டாய்? எதற்காக உன்னைச் சிறைப்படுத்தியிருக்கிறார்கள், தெரியுமா?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"பழுவூர் ராணி கொடுத்த முத்திரை மோதிரத்தை என்னுடன் கொண்டுவந்தேன். இங்கேயும் அதற்குச் செல்வாக்கு இருக்கும் என்று எண்ணினேன். அதுதான் தவறாய்ப் போயிற்று?"

"அது தவறுதான், தம்பி, பெரிய தவறு! இங்கே சேநாதிபதி கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அல்லவா? பழுவூர் வம்சத்துக்கும் கொடும்பாளூர் வம்சத்துக்கும் பெரும் பகை என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியாமல் வந்துதான் அகப்பட்டுக் கொண்டேன். என்ன செய்கிறதென்று தெரியவில்லை"

"தம்பி! நீ கவலைப்பட வேண்டாம்!"

"கவலைப்படாமல்."

"பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷத்தில் உள்ள ஆபரணங்கள் ஆயிரம் கழுதைப் பொதி கனமிருக்கும் என்கிறார்கள். அவ்வளவும் இளையராணிக்குப் போதவில்லையாக்கும். சரி கொண்டுவந்தால் உனக்கு என்ன தருவதாகச் சொன்னாள்?"

"தஞ்சைக் கோட்டைக் காவலைச் சின்னப் பழுவேட்டரை'யரிடமிருந்து பிடுங்கி எனக்குத் தந்து விடுவதாகச் சொன்னார்."

"தம்பி! தம்பி! தஞ்சைக் கோட்டைக் காவல் உனக்குக் கிடைத்தால், தட்டுத் தடங்கலில்லாமல் நான் கோட்டைக்குள் வரலாம் அல்லவா?"

"அழகாய்த் தானிருக்

"உன்னை விடுதலை செய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்."

"ஓகோ!"

"உன்னை ஒரு சமயம் ஓர் உதவி கேட்டேன் நீ மறுத்து விட்டாய். ஆயினும் நான் உனக்கு உதவி செய்ய வந்தேன். என்னுடன் எழுந்து வா! இந்தக் கணமே இச்சிறையிலிருந்து தப்பிவிடலாம்!"

"வைஷ்ணவரே! தாங்கள் சீக்கிரமே இங்கிருந்து போய் விடுங்கள்!"

"ஏன், அப்பனே!"

"என் உறையிலுள்ள கத்தி அதிகமாகப் புலம்பத் தொடங்கியிருக்கிறது. ஒரு 'வீர வைஷ்ணவனுடைய இரத்தம் வேண்டும் என்று கேட்கிறது."

"கேட்டால் கேட்கட்டுமே! என் உடம்பில் வேண்டிய இரத்தம் இருக்கிறது. உன் கத்திக்குத் தேவையானால் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் போகட்டும். நீ எழுந்து என்னுடன் வா!"

"இல்லை, நான் வர முடியாது!"

"காரணம் என்ன?"

"கண்ணைச் சுற்றிக் கொண்டு எனக்குத் தூக்கம் வருகிறது. எத்தனையோ நாளாக இரவில் நான் தூங்கவில்லை. இன்றைக்கு நன்றாய்த் தூங்குவது என்று தீர்மானித்திருக்கிறேன். அதனால் தான் பூனையைக் கூடத் தூக்கி எறிந்தேன்."

"தம்பி! இது என்ன இப்படிச் சொல்லுகிறாய்? இளைய பிராட்டி குந்தவை தேவியிடம் நீ ஒப்புக்கொண்ட காரியத்தை இப்படித் தானா நிறைவேற்றப் போகிறாய்? இந்த ஓலையைப் 'பொன்னியின் செல்வன்' கையில் சேர்ப்பிக்கும் வரையில் இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் பிரயாணம் செய்வேனென்று நீ ஒப்புக் கொள்ளவில்லையா!" இவ்விதம் சொல்லி ஆழ்வார்க்கடியான் தன்னுடைய மடியிலிருந்து ஓலையை எடுத்து வந்தியத்தேவனிடம் கொடுத்தான்.

அதை ஆர்வத்துடன் வந்தியத்தேவன் வாங்கிக் கொண்டான். இதுவரையில் ஆழ்வார்க்கடியான் தன் வாயைப் பிடுங்கி வஞ்சித்து ஏமாற்றப் பார்க்கிறான் என்றே அவன் எண்ணியிருந்தான். இப்போது அந்த எண்ணம் மாறியது.

"இந்த ஓலை தங்களிடம் எப்படி வந்தது?" என்று கேட்டான்.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### முத்திரை மோதிரத்தின் மகிமை



அக்பரின் தர்பாரில் இருந்தவர்களில், பீர்பால் அக்பருக்கு மிகவும் நெருக்கமானவர். பீர்பாலுடைய அறிவும், நகைச்சுவையும் அக்பரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. பல சமயங்களில் தன்னுடைய நகைச்சுவைத் துணுக்குகளினால் அக்பரைக் குலுங்கக் குலுங்க சிரிக்க வைப்பதில் மிகவும் வல்லவர். வழக்கப்படி அவர் ஒருநாள் அக்பரை சிரிக்க வைத்தபோது, வாய்விட்டு சிரித்த அக்பர் பீர்பாலைப் பார்த்து, "நீ சக்திவாய்ந்தவனாக இருப்பதன் காரணம் உன் மதியூகமும், நகைச்சுவை உணர்வுமே!" என்று விமர்சித்தார்.

"பிரபு! அதுதான் உங்களுக்கும், எனக்குமுள்ள வித்தியாசம்! நீங்கள் ஒரு சக்ரவர்த்தியின் பிள்ளை என்ற ஒரே காரணத்தினால் எந்த சாதனையும் புரியாமல் சக்ரவர்த்தி ஆகிவிட்டீர்கள். ஆற்றல் மிக்கவராக இருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய பெருமைக்கும், பெயருக்கும் காரணம் திறமை மட்டுமே! உங்களைப் போல் பிறப்பினால் அடையவில்லை. உழைத்துப் பெற்றவன் நான்!" என்று பெருமை பேச அக்பருக்கு இலேசாகக் கோபம் வந்தது. "என்ன உளறுகிறாய்?" என்று கேட்டார் அக்பர்.

"சரியாகத்தான் சொல்கிறேன். என் மூளையை யாரும் என்னிடம் இருந்து திருட முடியாது? அதனால் என் சக்தியும், பெருமையும் என்றென்றும் இருக்கும். ஆனால், உங்கள் மகுடமும், முத்திரை மோதிரமும் உங்களிடம் இருக்கும் வரை தான் உங்களுக்கு சக்தி உண்டு. அவற்றைப் பறித்து விட்டால் நீங்கள் செல்லாக் காசு! உங்களுக்கு மதிப்பே கிடையாது." என்றார் பீர்பால்.

சினம் தலைக்கேறிய அக்பர், "நீ சொல்வதை நிரூபித்துக் காட்டு! இல்லை என்றால் உனக்கு மரண தண்டனை!" என்று பீர்பாலைப் பார்த்து சீறினார். அன்றிரவு பீர்பால் படுக்கையில் படுத்தவாறே அக்பரின் சவாலை சமாளிப்பது எப்படியென்று சிந்தனை செய்தார். கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

அன்றிரவு பீர்பால் படுக்கையில் படுத்தவாறே அக்பரின் சவாலை சமாளிப்பது எப்படியென்று சிந்தனை செய்தார். கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அடுத்தநாள் வழக்கப்படி பீர்பால் தர்பாருக்கு வந்தார். அக்பர் வழக்கப்படி பீர்பாலுடன் பேசினாலும், அன்று அவர் இயல்பான பிரியத்துடன் பேசவில்லை. தான் நேற்று கூறியது அவருடைய மனத்தை பாதித்து இருக்கிறது என்று பீர்பால் உணர்ந்து கொண்டார்.

இரண்டு வாரங்கள் சென்றன. வாரத்திற்கு ஒருமுறை அக்பர் இரவு நேரத்தில் மாறுவேடமணிந்து தனியாக நகர் வலம் வருவது வழக்கம்! நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது. மக்கள் மன நிறைவுடன் இருக்கின்றனரா என்றெல்லாம் நேரில் கண்டறியவே அவர் அவ்வாறு செய்வார்.

மாறுவேடமணிந்து செல்லும்போது, அக்பரை யாராலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவுக்கு அஷ்ரப் எனும் ஒப்பனைக் கலைஞர் மிக அழகாக வேடம் அணிவிப்பார். அஷ்ரப்பும், பீர்பாலும் நண்பர்கள். ஒவ்வொரு முறை அக்பருக்குப் புதிய வேடம் அணிவிக்கும் போது அஷ்ரப் பீர்பாலைக் கலந்து ஆலோசிப்பார். இந்த வாரத்தில் இந்த மாறுவேடம் அணியப்போகிறார் என்பதை பீர்பால் முன்கூட்டியே ஊகித்து விடுவார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்றால் முயற்சி செய்.முடியாவிட்டால் பயிற்சி செய்.

~ பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்

13ஆவது அரசியலமைப்பை இல்லாதொழிப்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

தவிர, 13ஆவது அரசியலமைப்பை இல்லாதொழிப்பதன் மூலம் இந்தியாவின் தலையீட்டை வெட்டி விடுவதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சதித்திட்டம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதை நாம் கூறும்போது அவர் கூறியது அத்தனையும் உண்மைதானே என்று நீங்கள் தலை அசைப்பீர்கள்.

இங்கு நாம் அவர் கூறியது உண்மை என்றோ அல்லது பெய்யென்றோ வாதிட வரவில்லை.

மாறாக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்திருந்தவர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி, அவர் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையை வெளியிட்டவர்.

அதேநேரம் சில சந்தர்ப்பங்களில் அவர் முன்வைத்த கருத்தின் தெளிவின்மை காரணமாக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக விக்னேஸ்வரன் முற்படுகிறார் என்ற கருத்துக்களும் தமிழ் மக்கள் மத்தியில் விமர்சிக்கப்பட்டு வந்தது.

நிலைமை இதுவாக இருக்கையில், திடீரென ரணில் விக்கிரமசிங்க 13ஐ ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டுகிறார். இவ்வாறு 13ஐ ஒழிப்பதனூடாக இந்தியாவின் தலையீட்டை வெட்டிச் சரிக்கச் சதித்திட்டம் போடுகிறார் என நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் கூறியிருப்பது இங்கு விமர்சனப் பார்வைக்கு உட்படுகிறது.

ஆம், இலங்கைத் தீவில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு தரமாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த உண்மையைத் தமிழ் மக்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர்.

இருந்தும் தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய தெளிவான அறிவை, சிந்தனையை குலைக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்து தமிழ் மக்களைக் குழப்புகின்ற காரியங்களில் நம் தமிழ் அரசியல் தலைவர்கள் ஈடுபடுகின்றனர்.

அதில் குறிப்பாக இரா.சம்பந்தர் அவர்கள் மிக மோசமாக இருந்தார். சிங்களத் தலைவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவது அவர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கான அழுத்தத்தைக் குறைப்பது போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்துக்கு காலஅவகாசம் வழங்க வேண்டும் எனக் கூறுவது என இரா. சம்பந்தர் செய்த தப்புத்தாளங்கள் அவர் மீதான நம்பிக்கையை தமிழ் மக்கள் இழக்க வேண்டியதாயிற்று.

இந்த இடத்தில்தான் தமிழ் மக்களுக்கு ஒரு கனதியான அரசியல் தலைமை தேவை என்ற சிந்தனை எழுச்சி பெற்று அதனூடாகவே நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராகிறார்.

ஆனால் அவரும் இரா.சம்பந்தரை முந்திக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என நம்பிக்கை தருகிறார்.

இந்த நம்பிக்கையைத் தந்த அவர் திடீரென இல்லை ரணில் எதுவும் செய்யமாட்டார் என்கிறார்.

இங்குதான் அவரின் அரசியல் தெளிவின்மையும் எதையும் ஆய்ந்து அதன் பின் கருத்துரைக்க முடியாத தன்மையும் தெரிகிறது.

# தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வு கிட்ட வேண்டும்

## சுவிட்சலாந்து பாராளுமன்றில் வலியுறுத்தல்

(ஜெனிவா)

**இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கும் புலம்பெயர்ந்த மக்களுக்கும் பன்னாட்டு விசாரணை மூலம் போர்க்குற்றங்களுக்கான உரிய தீர்வு கிடைக்கவேண்டும் என சுவிட்சர்லாந்து பாராளுமன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

சுவிட்சர்லாந்தின் சமூக ஜனநாயகக்கட்சியின் இளம் பாராளுமன்ற உறுப்பினரான பாபியான் மொலீனா கடந்த வியாழக்கிழமை அன்று சுவிட்சர்லாந்து மத்திய அரசிடம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், 40 ஆண்டுகளுக்கு முன்பு, 1983 இல் நடந்த படுகொலைகள் மற்றும் இலங்கையில் போர் தொடங்கியதன் காரணமாக முதல் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் சுவிட்சர்லாந்திற்கு தப்பி வந்துள்ளனர்.

40 ஆண்டுகளுக்குப் பிறகும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் நிலைமை மிகவும் பலவீனமாகவே உள்ளது. இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கும், புலம்பெயர்ந்த மக்களுக்கும் பன்னாட்டு விசாரணை மூலம் போர்க்குற்றங்களுக்கான உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## அதிவேக நெடுஞ்சாலை வருமானம் சுமார் 40 சதவீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

நத்தார் மற்றும் பண்டிகை காலங்களில் அதிவேக நெடுஞ்சாலை யின் வருமானம் சுமார் 40 சத்வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அதிவேக நெடுஞ் சாலைகளில் 1 லட்சத்து 40 ஆயிரத்து 791 வாகனங்கள் பயணித்துள்ளன.

இதன்மூலம் 464 லட்சத்து 57 ஆயிரத்து 600 ரூபாய் வருவாய் ஈட்டப் பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 23 ஆம் திகதி 45 ஆயிரத்து 503 வாகனங்கள் பயணித்துள்ளதுடன், அதனூடாக 74 ஆயிரத்து 550 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

இதன்படி, கடந்த 23ஆம் திகதி கிடைத்த வருமானமே இதுவரை அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக ஈட்டப்பட்ட அதிகூடிய வருமானம் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (5-6)

## 4 வலம்புரிச் சங்குகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு (4) வலம்புரி சங்குகளுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் எனவும் அவர் குறித்த நான்கு வலம்புரிச் சங்குகளையும் விற்பனை செய்யும் நோக்கில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த நபர் வலம்புரி சங்குகளை வைத்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில்நேற்று முன்தினம் இரவு சாந்திபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு வலம்புரி சங்குகள் மன்னார் பொலிஸ் விசேட பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

(ம-7,285)

# யாழ்.மாநகரசபையின் நடவடிக்கையால் வியாபார நடவடிக்கைகளுக்கு பாதிப்பு

## யாழ்.வணிகர் கழகம் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் , யாழ் மாநகர சபையினால் வாகன தரிப்பிட கட்டணம் வசூலிக்கப்படுவதால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

அதேவேளை யாழ். மாநகர சபையின் கட்டண வசூலிப்பால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதுடன் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக பொது மக்கள் நீண்ட காலமாக விசனம் தெரிவித்தும் வருகின்றனர்.

யாழ்.நகர் பகுதியில் குறிப்பாக வைத்தியசாலை வீதி , மின்சார நிலைய வீதி மற்றும் கஸ்தூரியார் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகள் , மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துபவர்களிடம் தரிப்பிட கட்டணம் அறவிடப்டுகிறது.

அவை வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணம் அல்ல, வாகனத்தை நிறுத்துவதற்கான தரிப்பிட கட்டணம்என கூறியே அறவிடப்படுகிறது. அதவது வாகனம் காணாமல் போனாலோ, வாகன பாகங்கள் காணாமல் போனாலோ அதற்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல.

துவிச்சக்கர வண்டிகளுக்கு 20 ரூபாயும், மோட்டார் சைக்கிள்களுக்கு 30 ரூபாயும் அறவிடப்பட்டு வருகின்றன. அவ்வாறு அறவிடப்படும் போது மிகுதி பணம் இல்லை என மிகுதியை கொடுக்காத சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்துடன் கட்டணம் அறவிடும் நபர்கள் மாநகர சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டு அதனை எடுத்துக்கொண்ட மூன்றாம் நபர்களே.. அவர்கள் உரிய முறையில் ஒழுக்கமாக நடந்து கொள்பவர்கள் இல்லை எனும் விசனமும் உண்டு.

இவ்வாறு கட்டணம் அறவிடப்படுவதனால் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவு வழங்க மோட்டார் சைக்கிளில் வருவோர் மூன்று வேளையும் தலா 30 ரூபாய் வீதம் நாளொன்றுக்கு 90 ரூபாய் கட்டணம் செலுத்துகின்றனர்.

அதேபோல கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய செல்வோரும் மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன் கட்டணம் வசூலிப்பவர் பணத்தினை வசூலித்து சென்று விடுகிறார். இது தொடர்பில் மக்கள் கடும் விசனம் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் தற்போது இந்தகட்டண வசூலிப்பால் தமது கடைகளுக்கு வரும் மக்கள் குறைந்துள்ளதாக யாழ்.வணிகர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

தமது கடைகளில் சிறு பொருட்களை வாங்க வருவோரிடமும் தரிப்பிட கட்டணம் வசூலிப்பதால் பொருட்களை வாங்க வருவோர் தமது கடைகளை தவிர்த்து கொள்கின்றனர் என யாழ். வணிகர் கழகம் கவலை வெளியிட்டுள்ளது.(ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 ஆண்டுகள் கடந்தும் ஆறாத ரணமாய் கொல்லும் சுனாமி நினைவலைகள்

கடல் தாயே நினை விருக்கிறா?

எம் உறவுகளை உன்னுடன் அள்ளிச் சென்று இன்றுடன் 19 வருடங்கள் கடந்து விட்டன. எப்படி நீ அதை மறப்பாய். ஏனென்றால் நீ அள்ளிச் சென்ற அத்தனை உறவுகளும் உன் மடியில் விளையாடியவர்கள் தானே?

வெயிலோ, மழையோ, குளிரோ, புயலோ, உன்னை நம்பி நாடி வந்த உறவுகளை ஊருடனேயே அள்ளி விழுங்கி ஏப்பம் விடும் அளவுக்கு நாம் என்ன பிழை செய்து விட்டோம்.

"சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும்..."

என்று சின்னஞ்சிட்டுக்கள் அத்தனையும் உன்னருகில் உன் நுரை அள்ளி ஆளுக்காள் அப்பி விளையாடிய போதெல்லாம் சிறிதேனும் கோபப்படாமல் சிரித்துக் கொண்டிருப்பாயே அலையால் தாலாட்டியபடி.

வானிலை அறிக்கை வாசிக்கப்படும் மீனவர் கடலில் இறங்க வேண்டாமென இருப்பினும் நாம் புறப்படுவோம்.

கட்டுமரம் தனை தள்ளி பாயை விரித்து உன்னில் பயணிக்க தாயாய் எமைக் கரை சேர்ப்பாயே மறந்து விட்டாயா?

கருமேகம் சூழ்ந்து கடலே ஊரை விழுங்குவது போல உரு மறைப்பாய்.

அப்போதெல்லாம் எம் பிள்ளைகள் உன் அழகை ரசித்துக் கொண்டே தரையில் நண்டு பிடித்துக் களிப்புறுவர்.

நீ அவர்களை அடித்ததில்லையே!

பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள் வீடு வருவார்களோ, இல்லையோ, முதலில் வந்து உன்னில் நீச்சல் அடித்து பழகிய போதெல்லாம் மெல்லிய அலையால் அவர்களை மிதத்தி நீச்சல் கற்பிக்கும் ஆசிரியராயிருந்தாயே? எப்படி உன்னால் இப்படி விஸ்வரூபம் எடுக்க முடிந்தது.

நாம் செய்யாத குற்றத்தை செய்து விட்டதாய் யார் சொன்னாலும் உன் மீது தானே சத்தியம் செய்வோம். உன் மீது யாரும் பொய்ச் சத்தியம் செய்தால் எம் இதயம் நொருங்கி விடும். ஏனென்றால் உன்னையும் எங்களையும் பிரித்து விட முடியாதபடி எம்முணர்வுகளில் பின்னிப் பிணைந்திருந்தாய். ஆனால் அந்த உறவுப் பின்னல்களையெல்லாம் உடைத்தெறிந்து எம் உறவுகளையும் உடைத்தெறிந்து விட்டு மீண்டும் நீ அமைதி ஆனதை எம்மால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லையம்மா!

கடலம்மா! கடலம்மா! என்று உப்புக் காற்றைக் கிழிக்கும் அளவுக்கு கத்திக் கத்தி உன்னை அழைப்போமே அப்போதெல்லாம் எம்முடன் எம்மில் ஒருவராய் இருக்கிறாய் என்றல்லவா நினைத்திருந்தோம்.

எம் உறவுகள் அத்தனையையும் நீ விழுங்கி விட்டு மௌனமாய் இருந்தபோதும் கூட உன்னிடம் வந்து தஞ்சமடைந்தோமே. தாயை விட்டு எப்படி சேய்கள் வாழும். நீ தானே எங்கள் அத்தனைக்கும் சொந்தக்காரி.

நீ எங்களை எட்டி உதைத்தாலும் உன்னை விட்டு எம்மால் எப்படி இருந்திட முடியும்? ஏனென்றால் நீ எம் அம்மா. அல்லது அன்பு என்பதால் எம் வாழ்வில் இருந்து வாழ்வாதாரம் அத்தனையிலும் நீ என்று உன்னை எம் உயிரினில் வைத்திருக்க நீயோ எம் ஊரில் ஒரு பூண்டைக் கூட விட்டு வைக்காமல் பிடுங்கி எடுத்து விட்டாய்.

இருந்தும் என் செய்ய? உன்னை விட்டால் எமக்கு யாரம்மா என அத்தனையும் மறந்து மீண்டும் உன்னிடத்தே அடைக்கலம் ஆகி விட்டோம். ஆனாலும் எம் அத்தனை உறவுகளின் நினைவுகள் நீங்கா வடுக்களாய் எம் நெஞ்சில் நிலைத்து விட்டன.

எது எப்படியோ எம் உறவுகள் அத்தனையும் உன்னில் வாழ்கிறார்கள் எனும் நினைவு எம்மிலிருந்து வரும் பெருமூச்சின் வெப்பத்தை ஓரளவு தணித்துக் கொள்கிறது.

அம்மா! உன்னிடம் உன் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் இரந்து கேட்கிறோம் இன்னொரு முறை நீ இப்படி கோரதாண்டவம் ஆடி விடாதே. ஏனென்றால் இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எம்மிலிருந்து இழக்கக் கூடாத அனைத்தையும் இழந்து புழுவாய்த் துடித்து இப்போதே அந்த ரணங்களில் இருந்து மீண்டெழுந்து கொண்டிருக்கிறோம்.

பட்டமரங்களின் நிழலிலே விதைக்கப்பட்ட விதைகளை முளைக்கவிடு. அவை விருட்சமாகி விழுது விடட்டும். இது உன்னை தாயாக நினைக்கும் ஒரு தனயனின் ஆத்மார்த்த குரல்.

**மாவை நா.கஜேந்திரன்**

## மீண்டும் வராதே...

ஆழிப் பேரலையே ! – நீ
மீண்டும் வராதே.
ஆண்டுகள் பத்தொன்பது கரைந்தோடியும்
தந்தவலி பேரிடியாய்
இன்றும் ஆழ்மனதில்.

கடற்செல்வம் அள்ளித்தந்து
நாம் தீட்டிய வாழ்வதனை
நொடிப்பொழுதிற் துடிதுடிக்க
சுருட்டி நீ ஆடிய கோரத்தாண்டவம்
ஐயோ..! இனியும் வேண்டாம்.

நாளை விடியும்
நம் வாழ்வும் விடியும்
கனவுகளோடு உறங்கிய ஜீவன்கள்
காலை விழிக்குமுன்
மீளாத்துயில் நீ தருதல் முறையோ ?

பாலுக்கழுத மழலை
காலை உணவுக்கமர்ந்த பாலர்
அவை அருந்தாமலே அலையில்
பாவமென்ன அவர் செய்தார் ?
முறையின்றிப் பழி நீ தீர்த்தாய்.

வலை வீசப் பணம் தந்தாய்
அலை வீசிப் பிணங் கொண்டாய்
அழகிய வாழ்வு முடித்தாய்.
தீர்ந்ததோ நின்பசி ? அரக்கியே !
இன்னும் வருவாயோ?

ஆக்கலும் பின் அழித்தலும்
அவனியில் இயல்பென்று
பாடம் சொன்னாயோ?
இயற்கையே மேலென்று
அலையே ! இடித்துரைத்தாயோ ?

நீ வந்த நாளென்றால்...
ஆழ்மனதில் இன்றும் அச்சமன்றோ
இன்னும் மிச்சமுண்டோ ?
ஆழிப் பேரலையே ! – நீ
மீண்டும் வராதே..

**பன்னீர்ச்செல்வம்,**
**நாவலர் வீதி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவார்ப்பணம்

# சிவபதப்பேறு அறிவித்தல்



பிறப்பு
24 - 03 - 1962

இறப்பு
25 - 12 - 2023

# அமரர் ஸ்ரீரங்கநாதன் மாலினி

பிறவுண் வீதி, நீர்வாவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீரங்கநாதன் மாலினி அவர்கள் நேற்று (2023.12.25) அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவகலை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதனின் அன்பு மனைவியும் ஸ்ரீமகளின் அன்புத் தாயாரும் நிஷாந்தனின் அன்பு மாமியாரும் திருவரேஷ்வர், லிங்கேஷ்வர் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் நிர்மலா, இராமநாதன், சாரதா, சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஷ்வரன், நாகேஷ்வரன், துரைசிங்கம், சரஸ்வதிதேவி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (2023.12.26) காலை 10 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.33, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : -
குடும்பத்தினர்

(18368)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடு விற்பனைக்கு

சனல் ஆடு
(சினைப்பட்டது)
தாவடியில் விற்பனைக்கு
உண்டு

(18370)

**077 689 4344**

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள்
5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (18357)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension இலங்கை விசா நீடிப்பு தரப்படும்

(C-8019)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8019)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

VISA CONSULTANT
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.

(18358)

**077 038 5584**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

இராசபாதை றோட்டுக் கரையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(18346)

**077 882 8638**

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.



- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
  ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(C-8013)

**077 165 1729, 077 773 0567,**
**021 222 8334**

## உடனடி வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு
மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.

- முகாமையாளர் ஆண் / பெண்
- விற்பனை உதவியாளர் ஆண்
- கணக்குப் பதிவாளர் ஆண் / பெண்
- களஞ்சியக் காப்பாளர் ஆண்
- சுத்திகரிப்பாளர் பெண்

(C-8015)

பொருத்தமானவர்கள் **077 743 5265**
எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## மரண அறிவித்தல்



### சூசைமுத்து பரம்சோதி

( ஆசிரியர் – யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை )

யாழ்ப்பாணம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைமுத்து பரம்சோதி அவர்கள் நேற்று முன்தினம் (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைமுத்து - மரியமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அழகரட்ணம் மற்றும் பூமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் அழகுரேவதி (ரேவா - ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் மேரி எஷபெல்லா, பவிஷன், நன்நிலவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தரத்தினம் (ரதி) அவர்களின் பாசமிகு சகோதரனும் அலெக்சன் மேரியஸின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (26.12.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 420 2047

அடைக்கல மாதா கோவிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை. (18361)




யோகர் சுவாமி சமாதிக் கோயில் அறக்கட்டளை
கொழும்புத்துறை

## மார்கழித் திருவாதிரை வழிபாடும் நூல் வெளியீடும்

அபிடேக பூசை வழிபாடு நடைபெற்று
நற்சிந்தனைப் போட்டிகளில் வெற்றியீட்டிய
மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்
பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

மார்கழி
27 புதன்கிழமை
காலை 9.00 மணி

யோகர் சுவாமி சமாதிக் கோயில்
இல. 94, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

(18265) - சுபம்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org